Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 31/2026**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரா | கிராமம் | : | அரூர் |
| கணவர் பெயர் | : | பழனிசாமி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 48 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04nd Day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரூர் மதுவிலக்கு அமல்பிரிவில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 12.07.2025ம் தேதி காலை 10.00 மணிளவில் நான் எனது தலைமையில் என்னுடன் அசா 1 மற்றும் 2 ஆகியோருடன் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக அரூர் காவல் நிலைய எல்லைக்குட்ப்பட்ட வள்ளிமதுரை கிராமம் அருகே கண்காணித்து கொண்டு இருந்த போது ஆஜர் எதிரி கமலா சில்லரை விற்பனைக்காக மதுபாட்டில் மூடிகளை திறந்து வைத்து இருந்தார், போலீசார் ஆகிய எங்களை கண்டதும் தப்பியோட முயன்றார். அவரைப் பிடித்து சோதனை செய்த போது அவர் வைத்து இருந்த பையில் 27 Mclean பிராண்டி பாட்டில்கள் 180ml அளவு வைத்திருந்தார். எதிரியிடம் அதைப்பற்றி கேட்ட போது எதிரி அருகில் உள்ள அரசு

மதுபானக்கடையில் மொத்தமாக வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருப்பதாக கூறினார். உடனே எதிரியை நான் அந்த இடத்திலேயே கைது செய்தேன். தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த காவலர்கள் அசா-1 மற்றும் 2 ஆகியோர் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180ml அளவு கொண்ட 27 மதுப்பாட்டில்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசரில் என்னுடன் வந்த காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்பு தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் காவலர்கள் அசா-1 மற்றும் 2 ஆகியோர் முன்னிலையில் வழக்கு சொத்தை கொட்டி அழித்தேன்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசர் நான் தயார் செய்தது தான். **கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசர் ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.**

பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது அரூர் மது விலக்கு காவல் நிலைய குற்ற எண் 314/2025சட்ட பிரிவுகள் 4(1) (C) TNP Act படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன்.

மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

சாட்சிகள் 1,2 தனிதனியாக விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்தேன்.

அத்துடன் எனது புலன் விசாரணை முடித்து 12.07.2025ம் தேதி எதிரி கமலா என்பவருக்கு எதிராக சட்ட பிரிவுகள் 4(1) (C) TNP Act படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரரும் புலன் விசாரணை அதிகாரியும் நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தின் போது தனிநபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. இந்த வழக்கின் கைப்பற்றுதல் மகசரை தவிர மாதிரி வரைபடமோ பார்ரை மகசரோ தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 12.07.2025ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் அது 06.03.2026ம் தேதியன்று தான் இறுதி அறிக்கையோடு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக சரிவர புலன் விசாரணை செய்யாமல் இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 31/2026**

வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி | கிராமம் | : | அரூர் |
| கணவர் பெயர் | : | கணேசன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 42 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04nd **Day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

கடந்த 12.07.2025ம் தேதி நான் பணியில் இருந்த போது காலை 10.00 மணிஅளவில் அரூர் மது விலக்கு காவல் ஆய்வாளர் சந்திரா அவரது தலைமையில் நானும் என்னுடன் அசா-1ம் ஆகியோர் அரூர் எல்லைக்குட்பட்ட வள்ளிமதுரை கிராமம் அருகே கண்காணித்து கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரி கமலா என்பவர் எங்களை கண்டதும் தப்பியோட முயன்றார் அவரை பிடித்து விசாரித்த போது அரசு அனுமதியின்றி அரசு மதுபானத்தை விற்பதற்காக சில்லரையாக வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்ய எதிரி அரசு உரிமம் இன்றி 180 ml அளவு கொண்ட 27

Mclean பிராந்தி பாட்டில்களை விற்பதற்காக வைத்திருப்பதாக எதிரி சொன்னார். மேற்படி மதுபாட்டில்களை சம்பவயிடத்திலேயே தனிநபர் சாட்சியம் யாரும் முன்வராததால் நானும் தலைமை காவலர் செல்வி என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடன் வந்த அசா-1ம் சாட்சி கையொப்பம் இட்டோம். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை காவல் ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று சம்பவ இடத்திலே எங்கள் முன்னிலையிலேயே அழித்தார்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசர் ஏற்கனவே அசாஆ 1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அரசு மதுவிலக்கு பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட வாகனத்தில் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோம். அந்த வாகனத்தின் ஓட்டுநர் யார் லோகேஷ் என்பவர் ஆவார். அவருடன் சேர்ந்து மொத்தம் 4 நபர்கள் சென்றோம். அந்த சம்பவத்தை ஓட்டுநரும் பார்த்தாரா என்றால் வழக்கு சம்பவம் பற்றி தெரியும். எதிரியை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து தான் ஆவணங்களை தயார் செய்தோம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான் அங்குள்ள நபர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் சரிதான், அங்குள்ள பொது மக்களை விசாரித்தார்களா என்றால் விசாரிதார்கள் ஆனால் யாரும் சாட்சியம் அளிக்க

முன்வரவில்லை.  அவர்களின் பெயர் விலாசங்களை காவல் ஆய்வாளர் குறிப்பிட்டு கொண்டார். கைப்பற்றுதல் கமசரில் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.  இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகசரை தவிர பார்வை மகசரோ மாதிரி வரைப்படமோ எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலமோ ஏதும் பெற வில்லை என்றால் சரிதான்.  எதிரியிடம் இருந்து மதுபாட்டில்களை அதிக விலைக்கு வாங்க யாரேனும் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் போலீசார் ஆகிய எங்களை கண்டதும் ஓடிவிட்டார்கள்.  எதிரி தப்பியோட முயன்றார் என சொல்லியுள்ளேன் என்றும் எந்த திசையில் தப்பி ஓட முன்றார் என்றால் சுமார் 100 அடி தூரம் தப்பியோடினார் அவரை நான் தான் பிடித்தேன்.  நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அளூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 31/2026**

வழக்கு சாட்சி எண். PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கர் | கிராமம் | : | அரூர் |
| தந்தை பெயர் | : | தீத்தான் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 44 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04nd **Day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

கடந்த 12.07.2025ம் தேதி நான் பணியில் இருந்த போது காலை 10.00 மணிஅளவில் அரூர் மது விலக்கு காவல் ஆய்வாளர் சந்திரா அவரது தலைமையில் நானும் என்னுடன் தலைமை காவலர் 440 செல்வி ஆகியோர் அரூர் எல்லைக்குட்பட்ட வள்ளிமதுரை கிராமம் அருகே கண்கானித்து கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரி கமலா என்பவர் எங்களை கண்டதும் தப்பியோட முயன்றார் அவரை பிடித்து விசாரித்த போது அரசு அனுமதியின்றி அரசு மதுபானத்தை விற்பதற்காக சில்லரையாக வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்ய எதிரி அரசு உரிமம் இன்றி 180 ml அளவு

கொண்ட 27 Mclean பிராந்தி பாட்டில்களை விற்பதற்காக வைத்திருப்பதாக எதிரி சொன்னார். மேற்படி மதுபாட்டில்களை சம்பவயிடத்திலேயே தனிநபர் சாட்சியம் யாரும் முன்வராததால் நானும் தலைமை காவலர் செல்வி என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடன் வந்த தலைமை காவலர் செல்வி என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை காவல் ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று சம்பவ இடத்திலே எங்கள் முன்னிலையிலேயே அழித்தார்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசர் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அரசு மதுவிலக்கு பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட வாகனத்தில் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோம். அந்த வாகனத்தின் ஓட்டுநர் யார் லோகேஷ் என்பவர் ஆவார். அவருடன் சேர்ந்து மொத்தம் 4 நபர்கள் சென்றோம். அந்த சம்பவத்தை ஓட்டுநரும் பார்த்தாரா என்றால் வழக்கு சம்பவம் பற்றி தெரியும். எதிரியை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து தான் ஆவணங்களை தயார் செய்தோம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான் அங்குள்ள நபர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் சரிதான், அங்குள்ள பொது மக்களை விசாரித்தார்களா என்றால் விசாரிதார்கள் ஆனால் யாரும் சாட்சியம் அளிக்க

முன்வரவில்லை. அவர்களின் பெயர் விலாசங்களை காவல் ஆய்வாளர் குறிப்பிட்டு கொண்டார். கைப்பற்றுதல் கமசரில் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகசரை தவிர பார்வை மகசரோ மாதிரி வரைப்படமோ எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலமோ ஏதும் பெற வில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து மதுபாட்டில்களை அதிக விலைக்கு வாங்க யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை, எதிரி தப்பியோட முயன்றார் என சொல்லியுள்ளேன் என்றும் எந்த திசையில் தப்பி ஓட முன்றார் என்றால் மருதிப்பட்டி சாலையில் தப்பியோட முயன்றார். நாங்கள் யார் எந்த திசையில் இருந்து எதிரியை பிடித்தோம் தற்போதுஎனக்கு நியாபகம் இல்லை. நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்து இருந்தால் பொது மக்களையும் சாட்சிளாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**